


03. 11. 2025

தலைப்புச்செய்திகள்

- நாட்டின் உயிரி பொருளாதார வளர்ச்சி கடந்த 11 ஆண்டுகளில்,
  140 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தற்போதைய தேவை என்று மத்திய தகவல் ஒலிபரப்பு துறை இணையமைச்சர்
  டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
- தர்மபுரியில் புதிய பேருந்து நிலையம் இன்னும் 2 மாதங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என முதலமைச்சர்
  திரு. மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் கூடுதல் மகளிருக்கு உரிமைத் தொகை அடுத்த மாதத்திலிருந்து வழங்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.
- தமிழகம் மற்றும் காரைக்காலை சேர்ந்த 35 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டின் உயிரி பொருளாதார வளர்ச்சி கடந்த 11 ஆண்டுகளில்,
140 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் அறிவியல் தொழில் நுட்பம், புதுமை கண்டுபிடிப்புகள் மாநாட்டை இன்று துவக்கி வைத்து உரையாற்றிய பிரதமர், நம்நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சி வேகமாக அதிகரித்து உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான செலவீனங்கள் கடந்த 10 ஆண்டுகளில் இருமடங்காக உயர்ந்து இருப்பதாக கூறிய அவர், பதிவு செய்யப்பட்ட காப்புரிமைகளும் 17 மடங்கு உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நம்நாட்டில் 6 ஆயிரம் அதிநவீன ஸ்டார்ட்அப் தொழில் நுட்ப நிறுவனங்கள் எரிசக்தி மற்றும் தரம் உயர்த்தப்பட்ட பொருட்கள் பிரிவில் பணியாற்றுவதாக சுட்டிக்காட்டினார்.

நாட்டின் செமி கண்டக்டர் பிரிவு மாபெரும் வளர்ச்சியை எட்டியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தொழில்நுட்ப மாற்றங்களின் முன்னோடி நாடாக இந்தியா தற்போது உருவெடுத்துள்ளது என்று கூறிய அவர், திறன் மேம்பாட்டு சூழலை உருவாக்கும் ஆராய்ச்சிகளை இலகுவாக மேற்கொள்ளும் வழிமுறைகளுக்கு அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக குறிப்பிட்டார்.

தொழில்நுட்ப மையமாக நம்நாட்டை தரம் உயர்த்தும் அரசின் அண்மைக்கால கொள்கைகள் சீர்த்திருத்தங்களால் தற்போது சிறப்பான பலன் கிட்டுவதாகவும் பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

தனியார் துறைகளிலும் ஆராய்ச்சியை ஊக்குவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒருலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஆராய்ச்சி மேம்பாடு படைப்பாற்றல் திறன் நிதியத்தை பிரதமர் துவக்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

எல்.முருகன்

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தற்போது மிகவும் தேவை என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இதன்மூலம் போலி வாக்காளர்கள், இரட்டை வாக்குரிமை வைத்துள்ளவர்கள், இறந்தவர்களின் வாக்குகள் கண்டறியப்பட்டு நீக்க வகை செய்யப்படும் என்றார்.

உண்மையான வாக்காளர்களை இணைப்பதற்கான வாய்ப்பு இதன்மூலம் உருவாவதாகவும் அவர் கூறினார்.

வாக்காளர் பட்டியல் திருத்தப்பட வேண்டுமென்று ஏற்கனவே திமுக பல முறை கோரிக்கை வைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் ஆணையம்

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் எதிர்பார்த்ததை விட சிறப்பாக மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் சென்னை உயர்நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை இன்று விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவத்சவா தலைமையிலான அமர்விடம் தேர்தல் ஆணையம் இதனை தெரிவித்தது.

ஒவ்வொரு வாக்களருக்கும் படிவங்கள் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்த படிவங்களை சரிபார்த்து, அடுத்தமாதம் 9-ம் தேதி சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் அடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து முழுமையான பரிசீலனைக்கு பின்னரே இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்து யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை என்றும் தேர்தல் ஆணையம் தெளிவு படுத்தியது.

❖❖❖❖❖❖❖❖❖

எஸ்.ஜெய்சங்கர்

இந்தியாவுடன் வலுவான தொடர்புகளை விரிவுப்படுத்த பஹ்ரைன் விரும்புவதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் டாக்டர் அப்துல் லத்தீஃப் - பின் – ரஷீத் – அல்ஸியானி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 5-வது இந்திய பஹ்ரைன் உயர் நிலை கூட்டு ஆணைய கூட்டத்தில் இதனை தெரிவித்த அவர், மத்திய கிழக்கு பகுதிகளில் அமைதியையும், நிலைத் தன்மையையும் உருவாக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

பேச்சுவார்தைகள், பரஸ்பர மதிப்பு மரியாதை மூலம் இதற்கான சாத்திய கூறுகளை அவர் சுட்டிக்காட்டினார்

காசா அமைதி பிரகடனம், இதற்கான வாய்ப்புகளை உருவாக்கி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அனைத்து நாடுகளும் உரிய ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பிராந்திய அமைதியை முன்னெடுத்துச் செல்வதே பஹ்ரைன் நாட்டின் உயர் முன்னுரிமை என்றும் டாக்டர். அல்ஸியானி குறிப்பிட்டார்.

பஹ்ரைனுடனான பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமையும் என்று டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

விபத்து

தெலங்கானா மாநிலம் ரங்கா ரெட்டியில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்த 19 பேரின் குடும்பத்தினருக்கு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர்
திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்ச ரூபாயும்,

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என பிரதமர் திரு.நரேந்திரமோடி அறிவித்துள்ளார்.

சவெல்லா என்ற பகுதியில் இன்று காலை பேருந்தும், லாரியும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தர்மபுரியில் புதிய பேருந்து நிலையம் இன்னும் 2 மாதங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என முதலமைச்சர்
திரு. மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சோகத்தூர் பகுதியில் 10 ஏக்கர் பரப்பில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பேருந்து நிலைய பணிகளை இன்று ஆய்வு செய்த முதலமைச்சர், கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

தடங்கம் பகுதியில் ஆயிரத்து 733 ஏக்கரில் அமைந்துள்ள சிப்காட் தொழில் பூங்காவையும் முதலமைச்சர் பார்வையிட்டார்.

இப்பூங்காவில் தொழில் தொடங்க 201 நிறுவனங்கள் விண்ணப்பித்த நிலையில் ஏழு நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்

மின்சாரம் மற்றும் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களுக்கான உதிரி பாகங்கள், பேட்டரி உற்பத்தி நிறுவனங்களுக்கு இதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

மகளிர் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 6 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பேசியஅவர், அடுத்தமாதம் முதல் கூடுதல் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்படும் என்றார்.

மகளிர் விடியல் பேருந்து திட்டத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 820 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறிய அவர்,

இதன்மூலம் மாதந்தோறும் 900 முதல் ஆயிரம் ரூபாய் மகளிர் சேமிக்க முடிவதாக எடுத்துரைத்தார்.

மாநிலத்தில் ஒரு கோடியே 20 லட்சம் மகளிர் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை பெறுவதாக குறிப்பிட்டார்.

தமிழக அரசு பல்வேறு முன்னோடி திட்டங்கள் செயல்படுத்தி வருவதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

மீனவர்கள்

தமிழகத்தை சேர்ந்த 35 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

காரைக்கால் மற்றும் தமிழக பகுதிகளிலிருந்து நாட்டுப்படகு மற்றும் விசைப்படகு மூலம் மீன்பிடிக்கச் சென்ற 35 மீனவர்கள் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இம்மீனவர்களின் 3 விசைப்படகுகளும், ஒரு நாட்டு படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதில் நாட்டுப்படகில் இருந்த 4 மீனவர்கள் போதை பொருள் கடத்தியதாக குற்றம்சாட்டப்பட்ட நிலையில் இலங்கை போலீசாரிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

ஆர். என். ரவி

நாகை தமிழ்நாடு மீன்வள பல்கலைக் கழகத்தின் 10-வது பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநரும், பல்கலைக்கழக

வேந்தருமான திரு.ஆர்.என்.ரவி மாணாக்கருக்கு பட்டங்களை இன்று வழங்கினார்.

இதில் 447 பேருக்கு இளநிலை பட்டமும், 65 பேருக்கு முதுகலை பட்டமும் வழங்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான சிறப்பு முகாமில் உரிய ஆவணங்களுடன் கலந்துகொண்டு பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. சிவசௌந்தரவள்ளி அறிவுறுத்தியுள்ளார்.

இம்முகாம் நாளையும், வரும் 6, 10, 11, 13 ஆகிய தேதிகளிலும் நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

மயிலாடுதுறையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் பங்கேற்ற மாரத்தான் ஓட்டத்தை மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.மெய்யநாதன் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் யூரியா உரத்துடன் இணை பொருட்களை சேர்த்து விற்பனை செய்யும் உர விற்பனையாளர்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என

ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெரம்பலூரில் தேசிய அளவிலான நீச்சல் போட்டிகளில் பங்கேற்கவுள்ள தமிழக அணிக்கான வீர வீராங்கனைகள் தேர்வு நாளையும், நாளை மறுநாளும் நடைபெறவுள்ளது.

இதில் 14, 17, 19 வயதிற்குட்பட்ட மாணாக்கர் கலந்து கொள்ளலாம்.

❖❖❖❖❖❖❖❖❖

மியாவாக்கி

திருவாரூர் மாவட்டம் திருநாட்டியத்தான்குடி ரத்தினபுரீஸ்வரர் திருக்கோவிலில் மியாவாக்கி முறையில் குறுங்காடு அமைக்கும் பணி இன்று நடைபெற்றது.

மியாவாக்கி முறையில் மரங்கள் வேகமாக வளர்வதுடன் பறவைகளுக்கான இருப்பிடமாகவும் அமையும்.

இந்துசமய அறநிலையத் துறையுடன் இணைந்து தன்னார்வல அமைப்பினர் 400-க்கும் மேற்பட்ட பழ மரக்கன்றுகளை நட்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖

பறவைகள் வாய்ஸ்

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் சீசன் தொடங்கி உள்ள நிலையில் அதனை காணவரும் சுற்றுலா பயணிகள் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த வேண்டாம் என வனத்துறை அறிவுறுத்தி உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖